මුදල් අමාත්‍යාංශය
நிதி அமைச்சு
MINISTRY OF FINANCE

මහලේකම් කාර්යාලය, කොළඹ 01, ශ්‍රී ලංකාව.
செயலகம், கொழும்பு 01. இலங்கை
The Secretariat, Colombo 01. Sri Lanka

කාර්යාලය / அலுவலகம் / Office: (94)-11-2484500, (94)-11-2484600, (94)-11-2484700
ෆැක්ස් / பெக்ஸ் / Fax: (94)-11-2449823
වෙබ් අඩවිය / வெப் சைட் / Website: www.treasury.gov.lk


මගේ අංකය / எனது இல. / My No.: PE/COP/POLI/Circulars
ඔබේ අංකය / உமது இல. / Your No.:
දිනය / திகதி / Date: 2016.04.29

அரச தொழில்முயற்சிகள் சுற்றறிக்கை இல: 03/2016

அரச தொழில்முயற்சிகள் திணைக்களம்
பொது திறைசேரி
கொழும்பு – 01

அமைச்சுக்களின் செயலாளர்கள், திணைக்களத் தலைவர்கள்,
வர்த்தகக் கூட்டுத்தாபனங்கள், நியதிச்சட்ட சபைகள்
மற்றும் அரச உடமைக் கம்பனிகளின் தலைவர்கள் அனைவருக்கும்

**அரச உடமை தொழில் முயற்சிகளின் ஊழியர்களிடமிருந்து உழைக்கும் பொழுது செலுத்தும் வரியினை கழிப்பனவு செய்தல்**

அரச உடமை தொழில் முயற்சிகளின் ஊழியர்கள் உள்ளடங்களாக அரசாங்க ஊழியர்களிடமிருந்து உழைக்கும் பொழுது செலுத்தும் வரியினை கழிப்பனவு செய்தல் தொடர்பான 2013 நவம்பர் 04 ஆந் திகதிய எவ்பி/06/35/02/01 ஆம் இலக்க எனது கடிதத்தின்பால் உங்களது கவனம் ஈர்க்கப்படுகின்றது. சில அரச உடமை தொழில் முயற்சிகள் ஊழியர்களது ஆள்சார் வேதனாதிகளிலிருந்து உ.பொ.செ.வரியினை கழிப்பனவு செய்யாமல் அக் கம்பனிகளின் ஊழியர்களுக்கான செலவினத்திலிருந்து குறித்த வரியினை செலுத்துவது அவதானிக்கப்பட்டுள்ளது. இவ் விடயம் அரச தொழில் முயற்சிகள் தொடர்பான குழுவிலும் பலமுறை கலந்துரையாடப்பட்டுள்ளதுடன் இவ் விடயம் தொடர்பாக அரச தொழில் முயற்சிகள் தொடர்பான குழு உரிய அறிவுறுத்தல்களை வழங்குமாறு பணிப்புரை விடுத்துள்ளது.

02. இந்த வகையில், அரச உடமை தொழில் முயற்சிகளின் ஊழியர்களினால் செலுத்தப்பட வேண்டிய உழைக்கும் பொழுது செலுத்தும் வரி தொடர்பான பின்வரும் அறிவுறுத்தல்களை கடுமையாக பின்பற்றுமாறு நீங்கள் வேண்டப்படுகின்றீர்கள்.

**உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் ஒழுங்கு விதிகளுக்கு அமைவாக ஊழியர்களின் சம்பாத்தியத்திற்கான வரிப் பொறுப்புடமையிலிருந்து உழைக்கும் பொழுது செலுத்தும் வரி கழிக்கப்படுதல் வேண்டும். அரச உடமைக் கம்பனிகளின் பணிப்பாளர் சபை மற்றும் சிரேஷ்ட முகாமையாளர் குறித்த வரி கழிப்பனவு செய்யப்பட்டு உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு வைப்புச் செய்யப்படுவதை உறுதிப்படுத்தல் வேண்டும்.**

03. இவ் விடயம் தொடர்பான ஏதேனும் தெளிவுபடுத்தல்கள் தேவைப்படுமாயின், தயவுசெய்து உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் வரி பொருட்கோடல் குழுவின் தலைவருடன் எழுத்து மூலம் தொடர்பு கொள்ளவும்.

**ஒப்பம் : ஆர்.எச்.எஸ்.சமரதுங்க**
**திறைசேரியின் செயலாளர்**

பிரதிகள்:
1) சனாதிபதியின் செயலாளர்
2) செயலாளர், பொது நிர்வாக அமைச்சு
3) கணக்காய்வாளர் நாயகம்
4) செயலாளர், அரச தொழில் முயற்சிகள் தொடர்பான குழு
5) ஆணையாளர் நாயகம், உள்நாட்டு இறைவரித் திணைக்களம்